[9th March 1961

என்பது கனம் அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா? ஆகவே, அங்கு ஆஸ்பத்திரியும், மெட்டர்னிட்டி சென்டரும் துரிதமாக அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த ஆஸ்பத்திரி ஆந்திரா பிரிந்த பிறகு சித்தூர் ஜில்லா போர்டினால் நடத்தப்பட்டு வந்தது. படாஸ்கர் அவார்டுக்குப் பிறகு நமக்கு வந்தது அது. அதை வட ஆற்காடு ஜில்லா போர்டு நடத்தவேண்டும். அதை நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

Pension

* 699 *Q.*—SRI T. S. RAMASWAMI
SRI S. M. ANNAMALAI } :Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have taken any decision to old age pension; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No Sir.

(*b*) Does not arise.

SRI S. M. ANNAMALAI: ஒரு சில மாநிலங்களில் இப்படி 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பென்ஷன் தருவதாக நிர்ண யித்திருக்கிறார்களே? அம்மாதிரி ஏன் நம்முடைய மாநிலத்தி லும் நடத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்கக்கூடாது?

THE HON. SRI C. SUBRAMANIAM: மற்ற மாநிலங்களில் செய்வதையெல்லாம் நாமும் செய்யவேண்டுமென்ற அவசியம் இல்லை. இங்கு வேறு சில முக்கியமான பணிகளை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்தப் பணிகள் மற்ற மாநிலங்களில் நடப்பதில்லை. ஆகையினால் எது உசிதம் என்று தோன்றுகிறதோ அதெல்லாம் எடுத்துக்கொள்ளப்படும்.

SRI T. S. RAMASWAMI: வயது வந்தவர்களுக்கு பென் ஷன் கொடுத்து உதவவேண்டும் என்று முடிவு எடுக்கபபோவதாக முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதாக பத்திரிகையில் வந்தது. அது உண்மையா அல்லது கயிறு திரிப்பு தானா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அப்படிப் பார்த்ததாக எனக்கு ஞாபகம் இல்லை.

SRI P. S. CHINNADURAI: இவ்வாறு மூப்பு அடைந்தவர் களுக்கும் வேறு உதவியற்ற பெரியவர்களுக்கும் 60 வயதுக்கு மேலே ரூ. 20 கொடுப்பது என்ற அளவிலே உதவி செய்வதாக இருந்தால், எவ்வளவு தொகை அதற்காக ஆகும் என்றுவது சர்க் கார் ஆலோசித்துப் பார்த்திருக்கிறார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதைப்பற்றி ஆலோ சிக்கவில்லை.